கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதலாம் வருட/முதலாம் அரையாண்டு கலைமாணித் தேர்வு – 2017/2018
(நவம்பர் 2019)

# HC 1112 The Sources of Hindu Tradition

நேரம் : 02 மணித்தியாலங்கள்

பகுதி – I இல் இருந்து இரு வினாக்களையும் பகுதி – II இல் இருந்து இரு வினாக்களையும் தெரிவுசெய்து மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.

## பகுதி – I

01. “இந்து சமயத்தின் அடிப்படைகளை சாதாரண மக்களும் விளங்கும் வகையில் எழுந்தவை பதினெண் புராணங்களாகும்”. இக்கூற்றினை ஆதாரமாகக் கொண்டு மேல்வருவனவற்றை விளக்குக.
(அ) சமய நெறிகள் (10 புள்ளிகள்)
(ஆ) வழிபாட்டு முறைகள் (10 புள்ளிகள்)

02. “ஸ்ரீ வைணவ நெறி என்பது மிகத் தொன்மை வாய்ந்த நெறியாகும்.” இதனை அடிப்படையாகக் கொண்டு மேல்வருவன பற்றி விளக்குக.
(அ) பன்னிரு ஆழ்வார்களின் பெயர்களை பட்டியல்படுத்துக. (06 புள்ளிகள்)
(ஆ) உபதேசரத்தினமாலை எனும் நூலில் முதலாழ்வார்களின் சிறப்பு (07 புள்ளிகள்)
(இ) ஸ்ரீ வைணவனுக்குரிய இலக்கணம் (07 புள்ளிகள்)

03. “இந்துக்களின் அறிவியல் கண்டுபிடிப்புக்களை இலக்கியங்கள் வாயிலாக கண்டுகொள்ள முடிகின்றது.” மேல்வரும் இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு இக்கூற்றினைப் பரிசீலனை செய்க.
(அ) சரகசம்ஹிதை (10 புள்ளிகள்)
(ஆ) சுஸ்ருத சம்ஹிதை (10 புள்ளிகள்)

## பகுதி – II

04. வேதம் என்பதன் பொருளை விளக்கி அதில் கூறப்படும் நல்லிணக்கம் பற்றிய கருத்துக்களை ஆராய்க.
(30 புள்ளிகள்)

05. “உலகத்தை அடைவதற்கும் ஆய்வதற்கும் சாணக்கியரின் அர்த்த சாத்திரம் மிகச் சிறந்தது என்பது அரசியலாய்வாளர்களது கருத்தாகும்.” இதனை அடிப்படையாகக் கொண்டு அர்த்தசாத்திரத்தின் பாகம் ஒன்றின் முதலாம் அத்தியாயம் தொடக்கம் நான்காம் அத்தியாயம் வரை கூறப்படும் கருத்துக்களை மதிப்பிடுக.
(30 புள்ளிகள்)

06. “இந்துசமய மரபின் மூலங்களுள் அரச தர்மம் பற்றி விரிவாக விளக்குபவை தர்மசாஸ்திரங்களாகும்” மனுதர்மசாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்டு இக்கூற்றினை ஆராய்க.
(30 புள்ளிகள்)

*****